SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

# தமிழ்

செப்டம்பர் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# செப்டம்பர் - 2018

## தமிழ்நாடு

1) **தமிழ்நாடு வாக்காளர் வரைவுப் பட்டியல் 2018 :** 2018 செப்டம்பர் 1 அன்று வெளியிடப்பட்டது.

| | |
|---|---|
| ➢ **தமிழ்நாட்டில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை** | **5.86 கோடி** |
| ➢ **பெண் வாக்காளர்கள்** | 2.94 கோடி |
| ➢ **ஆண் வாக்காளர்கள்** | 2.88 கோடி |
| ➢ **மாற்றுப் பாலினத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் (Transgender)** | 5184 |
| ➢ **அதிகமான வாக்காளர்களைக் கொண்ட சட்டப் பேரவைத் தொகுதி** | சோழிங்க நல்லூர் (Sholinganallur), காஞ்சிபுரம் மாவட்டம்<br>(6.07 லட்சம் வாக்காளர்கள்) |
| ➢ **குறைவான வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதி** | சென்னை கோட்டை - Chennai Fort<br>(1.64 லட்சம் வாக்காளர்கள்) |

2) தமிழக அரசானது 2018 செப்டம்பர் 12 முதல் இ-சிகரெட்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை முற்றிலுமாகத் தடை செய்துள்ளது.

3) 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்களைப் (Strobilanthus Kunthianus) பாதுகாப்பதற்கான திட்டத்தினை தமிழக அரசானது அறிவித்துள்ளது.

4) தரவுகளால் வழிநடத்தப்படும் ஆட்சி முறையை மேம்படுத்த தமிழக மின் ஆளுகை முகமையானது (TN - e-Governance Agency) இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் - மெட்ராஸ் (IIT Madras) உடன் கூட்டு முயற்சியில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளது.

5) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கும் முயற்சியில் தமிழக அரசானது அரசியலமைப்புச் சட்ட விதி 161-ன் படி அணுகுவதற்கு சட்டசபையில் 2018 செப்டம்பர் 6 அன்று தீர்மானம் இயற்றியுள்ளது.

6) **நாகர்கோவில்** நகராட்சியானது தமிழ்நாட்டின் **13-வது** மாநாகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி 2018 செப்டம்பர் 22 அன்று அறிவித்தார்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

7) ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் சென்னையிலுள்ள பள்ளிக்கரணையில் 'ஒடிசா இல்லத்தினை' (Odisha Bhavan) 2018 செப்டம்பர் 25 அன்று திறந்து வைத்தார்.

8) 'இந்தியாவில் தயாரிப்போம்' (Make in India) திட்டத்தினை ஊக்குவிக்கும் வகையில் மணிக்கு 160 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதிவிரைவு இரயிலான **Train 18**-ஆனது சென்னையிலுள்ள இரயில் பெட்டித் தொழிற்சாலையில் (Integral Coach Factory) வடிவமைக்கப்பட்டுள்ளது.

9) பொறியியல் பட்டதாரிகளுக்கான திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகள் தொடர்பான கருத்தரங்கானது 2018 செப்டம்பர் 10 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தமிழக முதல்வர் திரு.எடப்பாடி பழனிச்சாமி தமிழ்நாடு 'தகவல் தொலைத் தொடர்புத் தொழில்நுட்பத்துக்கான கொள்கையினை' (Tamilnadu Information Communication Technology Policy - ICT 2018) அறிமுகப்படுத்தினார்.

## தேசம்

1) உச்ச நீதிமன்றமானது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 377-வது பிரிவினைக் **'கிரிமினல் குற்றமல்ல'** (decriminalised the IPC Section 377) என்று **2018 செப்டம்பர் 6** அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. IPC-ன் 377வது பிரிவானது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் 1861-ம் ஆண்டு கொண்டு வரப்பட்டதாகும்.

2) ஆதார் பிரிவு 57 (Section 57 of Aadhar Act) : உச்ச நீதிமன்றமானது 2018 செப்டம்பர் 26 அன்று அளித்துள்ள தீர்ப்பின்படி ஆதார் அட்டையானது (Aadhar Card) வருமான வரி செலுத்துதல், நிரந்தர கணக்கு எண் (Permanent Account Number) தொடங்குதல் போன்ற குறிப்பிட்ட சில சேவைகளைப் பெறுவதற்கு மட்டும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஆதார் எண்ணை வங்கிக் கணக்குகள், அலைபேசி இணைப்புகள் மற்றும் பள்ளி மாணவர் சேர்க்கை போன்றவற்றிற்கு அவசியம் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

3) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 497வது பிரிவு (IPC Section 497) அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானது என்று உச்ச நீதிமன்றம் 2018 செப்டம்பர் 27 அன்று அறிவித்துள்ளது. இதுவரை திருமண பந்தத்துக்குப் புறம்பான உறவானது கிரிமினல் குற்றமாகக் கருதப்பட்டு வந்தது. உச்சநீதிமன்றமானது இத்தகைய உறவினை கிரிமினல் குற்றமாகக் கருதுவதை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

4) கேரளாவிலுள்ள சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குள் பெண்கள் நுழைவதற்கு இருந்த தடையினை ரத்து செய்து உச்ச நீதிமன்றமானது 2018 செப்டம்பர் 28 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

➢ தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமை தாங்கிய ஐந்து நபர் அடங்கிய அரசியல் சாசன அமர்வில் 4 பேர் பெண்கள் நுழையத் தடையில்லை (4 : 1) என்று தீர்ப்பளித்தனர்.

- அந்த அமர்வில் இருந்த ஒரே ஒரு பெண் நீதிபதியான இந்து மல்ஹோத்ரா சபரிமலை கோவிலுக்குள் பெண்கள் நுழைவதற்கான தடையை ஆதரித்துத் தீர்ப்பளித்தார்.

5) துணைக் குடியரசுத் தலைவர் திரு.வெங்கய்யா நாயுடு இராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் **'பொலிவுறு நகரங்கள் கண்காட்சியினை'** (Smart City Expo India - 2018) 2018 செப்டம்பர் 26 அன்று தொடங்கி வைத்தார்.

6) மத்திய உள்துறை அமைச்சகமானது **ஜார்க்கண்ட்** மாநிலத்திலுள்ள **'நகர் உந்தாரி நகரம்** (Nagar Untari) மற்றும் **அங்குள்ள இரயில் நிலையம்'** ஆகியவற்றின் பெயரை **'பன்ஷிதார் நகர்'** (Banshidhar Nagar) என்று பெயர் மாற்றம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

7) **ஒடிசா** மாநில அரசானது அம்மாநிலத்தில் **சட்ட மேலவையை** (Legislative Council) அமைப்பதற்கான தீர்மானத்துக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 169-ஆனது மாநிலங்களில் சட்ட மேலவையை உருவாக்குதல் மற்றும் நீக்குதல் தொடர்பான விதிமுறைகளை உள்ளடக்கியதாகும்.

8) பெங்களூரில் உள்ள கேம்பகௌடா சர்வதேச விமான நிலையமானது **முக அங்கீகாரம் மூலம் பயணிகளை விமான நிலையத்துக்குள் அனுமதிக்கு தொழில்நுட்பத்தினை** (Face recognition based passage system technology) ஆசியாவிலேயே முதன்முறையாக 2019-ம் ஆண்டு முதல் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

9) டெல்லி மாநில அரசானது 40 வகையான அத்தியாவசியச் சேவைகளை (எ.கா: ஓட்டுநர் உரிமம், சாதிச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குதல்) வீட்டுக்கே சென்று வழங்கும் திட்டத்தினை (doorstep delivery of essential government services) இந்தியாவிலேயே முதன் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

10) பாலின சமத்துவத்தை மேம்படுத்தும் வகையில் கேரள மாநில தீயணைப்பு மற்றும் மீட்புச் சேவைப் பிரிவில் பெண் தீயணைப்பு வீரர்களைச் (firewomen) சேர்க்க **கேரள அரசானது** முடிவு செய்துள்ளது.

11) **ஹரியானா** மாநில அரசானது பானிபட் மாவட்டத்திலுள்ள போகாலி கிராமத்தில் (Bohali Village) எத்தனால் உற்பத்தி செய்யும் ஆலையை (Ethanol Plant) அமைக்க இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் (Indian Oil Corporation) ஒப்பந்தம் செய்துள்ளது.

12) மத்தியப் பிரதேச மாநில அரசானது இந்தியாவிலேயே முதல் முறையாக **'மக்காச் சோளத் திருவிழாவினை'** (1st Corn Festival) 2018 செப்டம்பர் 29 அன்று நடத்தியது. இவ்விழாவானது ஆராய்ச்சியாளர்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களை ஒன்றிணைக்கும் நோக்கம் கொண்டதாகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

13) ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் (Swadesh Darshan Scheme) சத்தீஸ்கரில் உள்ள 13 சுற்றுலாத் தலங்களை இணைக்கும் நாட்டின் **முதலாவது பழங்குடிகள் சுற்றுப் பாதைத் திட்டமானது** (tribal circuit project) மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகத்தினால் தொடங்கி வைக்கப்பட்டது.

14) துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இரண்டு புதிய கடற்கரை சுற்றுலாத் தலங்களுக்கான சுற்றுப் பாதைத் திட்டத்தினைத் (Coastal tourism circuit) தொடங்கி வைத்தார்.

15) விமான நிலையங்கள் கழகத்தின்' (Airports Council) சர்வதேச விமான நிலைய சேவைகளின் தரத்துக்கான உலகத் தரவரிசையில் முதலாவது இடத்தினைப் (International Airport Service Quality World No.1 airport award) 'ஐதராபாத்தின் இராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையமானது பெற்றுள்ளது. இந்த விருதானது ஒரு ஆண்டுக்கு 5 முதல் 15 மில்லியன் பயணிகள் வந்து செல்லும் பிரிவின் கீழ் (5-15 Million Passengers per Annum Category) வழங்கப்பட்டது.

16) இராஜஸ்தான் மாநிலத்தின் முதலாவது சிங்க சவாரியானது (Lion Safari) நகர்கார் உயிரியல் பூங்காவில் (Nahargarh Biological Park) தொடங்கி வைக்கப்பட்டது.

17) இணைய அச்சுறுத்தல்களை (Cyber threats) எதிர்கொள்வதற்காக **மகாராஷ்டிர** மாநில அரசானது புதிய **சைபர் பல்கலைக்கழகத்தினைத்** (Cyber University) தொடங்கியுள்ளது.

18) நாடு முழுவதும் உள்ள பசு இனங்களைப் பாதுகாக்கவும் அவற்றின் நலம் பேணவும் அவற்றை **'ராஷ்ட்ர மாதா'** (Rashtra mata) என்று அழைக்கும் திட்டத்திற்கான தீர்மானத்துக்கு **உத்தரகாண்ட்** மாநில சட்டப் பேரவையானது ஒப்புதல் வழங்கியுள்ளது.

19) ஒடிசா மாநிலத்தின் ஆற்றல் நிலையம் (Powerhouse of Odisha) என்று அழைக்கப்படும் **'ஜார்சுகுடா விமான நிலையத்தினை'** (Jharsuguda airport) பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

20) 91வது அகாடெமி விருதுகள் (91st Academy Awards, 2019) எனப்படும் ஆஸ்கார் விருது வழங்கும் விழாவின், சிறந்த அயல்மொழித் திரைப்படத்துக்கான பிரிவில் (Foreign Language Film Category) இந்தியாவின் சார்பாக **'வில்லேஜ் ராக்ஸ்டார்ஸ்'** (Village Rockstars) என்ற அஸ்ஸாம் மொழித் திரைப்படமானது பங்கு பெற உள்ளது.

21) துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் திருப்பதியில் 'இந்திய சமையற்பயிற்சி நிறுவனத்தினை' (Indian Culinary Institute) தொடங்கி வைத்தார். இந்நிறுவனமானது இந்திய சமையற்கலையைப்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

பாதுகாத்தல், பரவச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

22) ‘அடல் நகர்ப்புற மாற்றம் மற்றும் புனரமைப்புத் திட்டத்தினால்’ (Atal Mission for Rejuvenation and Urban Transformation - AMRUT) வெளியிடப்படும் வாழ்வதற்கு ஏற்ற மாநிலங்களின் குறியீட்டுத் தரவரிசையில் **(Ease of Living Index)** ஆந்திரப் பிரதேச மாநிலம் முதலாவது இடத்தில் உள்ளது; ஒடிசா, மத்தியப்பிரதேச மாநிலங்கள் இப்பட்டியலில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

23) மத்திய அரசானது கூகுள் நிறுவனத்துடன் இணைந்து **லூ மதிப்பாய்வுப் பிரச்சாரத்தினைத்** (#Loo Review Campaign) தொடங்கியுள்ளது. இது இந்தியா முழுவதும் பொதுக் கழிப்பறைகளைக் கண்டறியவும் அவற்றினை மதிப்பாய்வு செய்யவும் பொது மக்களை ஊக்குவிக்கிறது.

24) தியாகிகளின் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான முகாம்களை (Employment Camps for martyr’s families) நடத்த இராஜஸ்தான் மாநில அரசானது திட்டமிட்டுள்ளது.

25) **பாமாஷா திட்டத்தின் கீழ்** (Bhamashah Yojana) இராஜஸ்தான் மாநில அரசானது வறுமை கோட்டுக்குக் கீழ் (BPL) வாழும் பெண்களுக்கு இலவசமாக கைபேசிகளை (Mobile Phones) வழங்கத் திட்டமிட்டுள்ளது.

26) **‘கோல்ட்’ (Gold)** என்ற பாலிவுட் திரைப்படமானது சவுதி அரேபியாவில் திரையிடப்படும் முதலாவது இந்தியத் திரைப்படம் என்ற பெருமையைப் பெறுகிறது.

27) பிரம்மபுத்திரா நதியில் கட்டப்பட்டுள்ள இந்தியாவிலேயே மிக நீளமான இரயில் மற்றும் சாலைப் போக்குவரத்து மேம்பாலமான **போகிபீல் மேம்பாலம்** (Bogibeel rail-cum-road bridge) **அசாம்** மாநிலத்தில் உள்ளது.

28) இந்தியாவின் முதலாவது **‘இரண்டாம் தலைமுறை எத்தனால் உயிரி சுத்திகரிப்பு ஆலையானது’** (2G Ethanol Bio-Refinery) **ஒடிசா** மாநிலத்தின் பார்கார் மாவட்டத்தில் (Bargarh) 2020-ம் ஆண்டில் அமைக்கப்பட உள்ளது. இந்த ஆலையில் எத்தனாலானது நெல்லின் வைக்கோலிலிருந்து (rice straw) தயாரிக்கப்பட உள்ளது.

29) ஹரியானா மாநில அரசானது தனது மாநிலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதற்காக **‘கவச்’** என்னும் தீவிரவாத எதிர்ப்புப் படையை (Anti-Terrorist Force ‘Kavach’) ஏற்படுத்தியுள்ளது.

30) மேகாலயா மாநில அரசானது “நீலப் புரட்சி : ஒருங்கிணைந்த மீன்வளத்துறை மேம்பாடு மற்றும் மேலாண்மை” (Blue Revolution : Integrated Development

and Manageemnt of Fisheries) என்ற திட்டத்தினை 2018 அக்டோபர் 26 அன்று தொடங்கி வைக்கத் திட்டமிட்டுள்ளது.

31) "இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையமானது" (Inland Waterways Authority of India - IWAI) அசாமின் நீமாட்டியிலிருந்து மஜூலிதீவு வரைக்கும் (Neamati to Majuli island) ரோல் ஆன்-ரோல் ஆஃப் (Roll on - Roll off - Ro - Ro) படகுப் போக்குவரத்து சேவையைத் தொடங்கி வைத்துள்ளது.

32) **ஒடிசா** மாநிலத்தில் கொண்டாடப்படும் **நுவாகாய் விவசாயத்** திருவிழாவானது (Nuakhai Festival) 2018 செப்டம்பர் 13 அன்று தொடங்கியது. 'நுவா' என்ற வார்த்தை 'புதிய' என்றும் 'காய்' (Khai) என்ற வார்த்தை உணவு என்றும் பொருள்படும்.

33) இந்தியாவின் முதலாவது நாய்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பூங்காவானது (Dog Park) தெலுங்கானாவின் ஐதராபாத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

34) ஒடிசா மாநில அரசானது காற்று மாசுபாட்டினைக் கட்டுப்படுத்த தொழிற்சாலைகளுக்கு நட்சத்திர மதிப்பீட்டு முறையை (Star rating) அறிமுகப்படுத்தியுள்ளது.

35) டெல்லி மெட்ரோவுக்கு அடுத்தபடியாக நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ இரயில் போக்குவரத்து அமைப்பாக 'ஐதராபாத் மெட்ரோ' உருவெடுத்துள்ளது.

36) இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் 'தக்ஷின பாரத் ஹிந்தி பிரச்சார சபையின்' (Dakshina Bharat Hindi Prachar Sabha) நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தினை 2018 செப்டம்பர் 22 அன்று தொடங்கி வைத்தார். இந்த சபையானது மகாத்மா காந்தியின் உதவியுடன் அன்னி பெசன்ட் (Annie Besant) அவர்களால் 1918-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

37) ஜார்க்கண்ட் மாநில அரசானது அலுவலகப் பயன்பாடுகளுக்காக எலக்ட்ரிக் கார்களை (Electric cars) அறிமுகப்படுத்தியுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## சர்வதேசம்

**1)** குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்கள் செப்டம்பர் மாதத்தில் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள்:

| | |
|---|---|
| **சைப்ரஸ் (Cyprus)** | **தலைநகரம் : நிக்கோசியா (Nicosia)**<br>**அதிபர் : நிக்கோஸ் அனஸ்டாசியாட்ஸ் (Nicos Anastasiades)** |

| | |
|---|---|
| **பல்கேரியா** | தலைநகரம் : சோபியா (Sofia)<br>அதிபர் : ரூமென் ராதேவ் (Rumen Radev) |
| **செக் குடியரசு (Czech Republic)** | தலைநகரம் : பிரேக் (Prague)<br>அதிபர் : மிலோஸ் ஜெமன் (Milos Zeman) |

2) துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு செப்டம்பர் மாதத்தில் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் :

- கடந்த 28 ஆண்டுகளில் மத்தியத் தரைக்கடல் பகுதியில் உள்ள நாடுகளுக்கு இந்தியாவின் மூத்த தலைவர் ஒருவர் பயணம் மேற்கொள்வது இதுவே முதன் முறையாகும்.

| | |
|---|---|
| **செர்பியா** | **தலைநகரம் : பெல்கிரேட் (Belgrade)**<br>**அதிபர் : அலெக்சாண்டர் வுகிக் (Aleksandar Vucic)** |
| **மால்டா** | தலைநகரம் : வால்லெட்டா (Valletta)<br>அதிபர் : மேரி - லூயிசா கோலெய்ரோ பிரெக்கா (Marie - Louise Coleiro Preca) |
| **ரோமேனியா (Romania)** | தலைநகரம் : புக்காரெஸ்ட் (Bucharest)<br>அதிபர் : க்ளாஸ் அயோஹான்னிஸ் (Klaus Iohannis) |

3) நெல்சன் மண்டேலா அமைதி மாநாடானது (Nelson Mandela Peace Summit) நியூயார்க் நகரில் 2018 செப்டம்பர் 24 அன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் ஐக்கிய நாடுகள் அவையானது **2019 முதல் 2028 வரையிலான கால கட்டத்தை 'நெல்சன் மண்டேலா அமைதிக்கான பத்தாண்டுகளாக'** (Nelson Mandela Decade of Peace) அறிவித்துள்ளது.

4) மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு இந்திய அரசானது நெதர்லாந்து நாட்டின் தலைநகரன 'ஹேக்'கில் உள்ள புராதான அமைதி மாளிகையிலிருந்து (iconoic peace palace at the Hague) க்ரோட் கெர்க் (Grote Kerk) வரையில் 'காந்தி யாத்திரையை' (Gandhi March) நடத்தியது.

5) **மாலத்தீவுகளின்** முதலாவது **கடலுக்கிடையிலான பாலமானது** (1st Cross Sea bridege of Maldives) "சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாலம் சீனா-மாலத்தீவுகள் தோழமைப் பாலம்" (China-Maldives Friendshi Bridge) என்றும் அழைக்கப்படுகிறது.

Free State Level TNPSC Group II (OT) MOCK TEST on 4th November 2018 (Sunday)
Test Centres: 1. Anna Nagar, 2. Adyar, 3. Salem, 4.Madurai, 5. Trichy, 6. Tirunelveli, 7. Cuddalore, 8. Vellore, 9. Thanjavur, 10. Kancheepuram, 11. Krishnagiri, 12. Erode, 13. Palani, 14. Coimbatore, 15. Namakkal

6) ஜம்மு காஷ்மீரின் இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லைப் பகுதியில் 5 கிலோ மீட்டர் நீளத்துக்கு **இந்தியாவின் முதலாவது ஸ்மார்ட் வேலி சோதனைத் திட்டமானது** (Smart fence Pilot Project) தொடங்கப்பட்டுள்ளது.

7) புகையைக் கக்காத, (Zero emissions) **ஹைட்ரஜன் எரிபொருளால் இயக்கப்படும் உலகின் முதலாவது பயணிகள் இரயிலை** (hydrogen powered passenger train) **ஜெர்மனி** வடிவமைத்துள்ளது. இந்த இரயிலுக்கு **'ஐலிண்ட்'** (iLint) என்று பெயரிடப்பட்டுள்ளது.

8) இந்தியா-வங்கதேச நாடுகள் கூட்டாக இணைந்து 3 புதிய திட்டங்களைச் செயல்படுத்த உள்ளன. அவையாவன :

- வங்கதேச இரயில்வேயின் குளவுரா - ஷாபஸ்பூர் பிரிவினைப் (Kulaura-Shahbazpur Section) புனரமைத்தல்.
- இந்தியாவிலிருந்து 500 மெகாவாட் மின்சாரத்தினை வங்கதேசத்துக்கு வழங்குதல்.
- அக்கவுரா-அகர்தலா இரயில் இணைப்பு (Akhaura-Agartala Rail Link)

9) உலகிலேயே புலிகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்திய முதலாவது நாடு **நேபாளம்** ஆகும்.

10) 87-வது இஸ்மீர் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது (87th Izmir International trade show 2018) துருக்கியிலுள்ள இஸ்மீரில் 2018 செப்டம்பர் 7 முதல் 11 வரை நடைபெற்றது.

11) டெல்லி மாநில அரசும் சியோல் பெரு நகர நிர்வாகமும் (Seoul Metropoolitan Government) இணைந்து "தோழமை மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில்" (Friendship and Co-operation Agreement) கையெழுத்திட்டுள்ளன. இதன்படி இவ்விரண்டு நிர்வாகங்களும் சுற்றுச்சூழல், போக்குவரத்து, சுற்றுலா, திடக் கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரம் போன்ற 12 வகையான துறைகளில் சிறப்பான செயல்முறைகளைப் பகிர்ந்து கொள்ள முடிவெடுத்துள்ளன.

## *மாநாடுகள் & கருத்தரங்குகள்*

| **மாநாடு/கருத்தரங்குகள்** | **நோக்கம்/கருத்துரு** (Purpose/Theme) | **இடம்** | **நாள்** |
|---|---|---|---|
| ➢ நான்காவது சர்வதேச ஆயுர்வேத மாநாடு | இந்த மாநாடானது நெதர்லாந்து மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஐரோப்பிய நாடுகளில் ஆயுர்வேத மருத்துவத்தினைப் பிரபலப்படுத்துவதை நோக்கமாகக் | லெய்டன், (Leiden), நெதர்லாந்து | 2018, செப்டம்பர் 01 முதல் 02 வரை |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு நடத்தப்பட்டதாகும். | | |
| ➢ சர்வதேச பெண் தொழில்முனைவோர் மாநாடு 2018 | "சமத்துவமானது பொருளாதார மேம்பாடு அடைவதிலிருந்தே தொடங்குகிறது" (Equality begins with Economic Empowerment) | காத்மண்டு, நேபாளம் | 2018, செப்டம்பர் 03 முதல் 05 வரை |
| ➢ உலக இந்து மாநாடு (World Hindu Congress) | "சுமந்ரைத் சுவிக்ரந்தே கூட்டாக எண்ணுவோம், வல்லமையுடன் வெல்வோம்" (Sumantrite Suvikrante think Collectively, achieve valiantly) | சிகாகோ, அமெரிக்கா | 2018, செப்டம்பர் 9 |
| ➢ முதலாவது 2 + 2 பேச்சுவார்த்தை (2 + 2 Dialogue) | இந்தியா-அமெரிக்கா இடையிலான பேச்சுவார்த்தை ஆகும். இதில் 'தகவல் தொடர்பு பொருத்தப்பாடு மற்றும் பாதுகாப்பு' ஒப்பந்தமானது (Communications Compatibility and Security Agreement - COMCASA) கையெழுத்திடப்பட்டது. | புது தில்லி | 2018 செப்டம்பர் 6 |
| ➢ 15-வது இந்திய-ஆசியான் வர்த்தக அமைச்சர்கள் மாநாடு (15th India-ASEAN Economic Ministers Meeting) | இந்தியா மற்றும் ஆசியான் கூட்டமைப்பு நாடுகளிடையே வர்த்தக உறவை மேம்படுத்துதல் | சிங்கப்பூர் | 2018, செப்டம்பர் 4 |
| ➢ சான்றளிப்புக்கான உலக மாநாடு (World Summit on Accrediation) - [WOSA - 2018] | "விளைவுகளின் அடிப்படையிலான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" (Challenges and opportunities in outcome based Accreditation) | புதுதில்லி | 2018, செப்டம்பர் 9 |
| ➢ ஆறாவது கிழக்கு ஆசிய நாடுகளின் வர்த்தக அமைச்சர்களுக்கான மாநாடு (6th East Asia Summitt - Economic Ministers Meeting) | டிஜிட்டல் பொருளாதாரத்தில் உள்ள வாய்ப்புகளை அதிகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். | சிங்கப்பூர் | 2018, செப்டம்பர் 4 |
| ➢ மூன்றாவது ASEM (ஆசிய-ஐரோப்பிய நாடுகளின் மாநாடு) உலக மூப்படைதல் மற்றும் மூத்த குடிமக்களின் மனித உரிமைகளுக்கான மாநாடு. | மூத்த குடிமக்களுக்கு எதிரான பாகுபாடுகளைக் களைவதும், அவர்களுக்கான மனித உரிமைகளை உறுதி செய்வதுமே இம்மாநாட்டின் நோக்கமாகும். | சியோல், தென் கொரியா | 2018, செப்டம்பர் 6 |
| ➢ நல் ஆளுகைக்கான பிராந்திய மாநாடு (Regional Conference on Good Governance) | வெளிப்படையான, பொறுப்புடன் கூடிய, குடிமக்களுக்கு ஏற்ற வகையிலான நிர்வாகத்தினை அளிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஏற்ற பொதுத் தளத்தினை மின்-ஆளுகை மூலம் | போபால், மத்தியப் பிரதேசம் | 2018, செப்டம்பர் 10 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | | |
|---|---|---|---|
| | உருவாக்குவதே இம்மாநாட்டின் நோக்கமாகும். | | |
| ➢ ஏழாவது WTO நகரச் சுற்றுலாவுக்கான சர்வதேச மாநாடு | "2030ம் ஆண்டில் நகர சுற்றுலாவுக்கான தொலைநோக்குப் பார்வை" (A 2030 Vision for Urban Tourism) | சியோல், தென்கொரியா | 2018, செப்டம்பர் |

## திட்டங்கள்

| **திட்டங்கள்** (Schemes/Yojanas) | **நோக்கம்/செய்திகளில் இடம் பெற்றதன் காரணம்** (Purpose/ Why in News) | **அமைச்சகம்/ காபினட்** (Ministry Cabinet) | **நாள்** |
|---|---|---|---|
| ➢ **ஸ்வயங்சித்தா** (Swayangsiddha) | மேற்கு வங்க மாநில அரசானது தனது பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் ஆள் கடத்தலை முற்றிலுமாக அழித்தொழிப்பதற்காக (to combat human trafficking) **ஸ்வயங்சித்தா** (Swayangsiddha) என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. | மேற்கு வங்கம் | 2018, செப்டம்பர் |
| ➢ கிருஷ்ணா குடிர் (Krishna Kutir) | கிருஷ்ணா குடிர் என்பது ஸ்வதார் கிரே திட்டத்தின் (Swadhar Greh Scheme) கீழ் 1000 கைம்பெண்களுக்காக அமைக்கப்பட்ட இல்லமாகும். | மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகமானது இத்திட்டத்தினை உத்தரப் பிரதேசத்தின் மதுராவில் தொடங்கி வைத்துள்ளது. | 2018, ஜூலை 31 |
| ➢ பிரதான் மந்திரி அன்னதாத ஆய சன் ரக்ஷன் அபியான் (Pradhan Mantri Annadata Aay Sanrakshan Abhiyan) | 2018 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டமானது விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருட்களுக்கான சரியான விலையை அளிப்பதை உறுதி செய்கிறது. | மத்திய அரசு | 2018, செப்டம்பர் 16 |
| ➢ பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (PMJAY) | அரசு உதவியுடன் செயல்படும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டமான இது, ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டுக்கு ஐந்து லட்ச ரூபாய் வரை காப்பீட்டுக்கான உத்தரவாதம் அளிக்கிறது. இத்திட்டம் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் இரண்டிலும் செல்லுபடியாகும். | மத்திய அரசு | 2018, செப்டம்பர் 23 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## 2018 செப்டம்பர் மாதம் நடைபெற்ற இராணுவப் பயிற்சிகள்

| பயிற்சியின் பெயர் | பங்கு பெற்ற நாடுகள் | பயிற்சியின் வகை (Type of Exercise) | நடைபெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|---|
| ➢ **யுத் அப்யாஸ்** (Yudh Abhyas 2018) | இந்தியா & அமெரிக்கா | வருடாந்திர இராணுவப் போர்ப் பயிற்சி | சௌபாத்தியா, (Chaubatia), உத்தராகாண்ட் | 2018, செப்டம்பர் 16 முதல் 29 வரை |
| ➢ **ஸ்லினெக்ஸ் 2018** (SLIMEX 2018) | இந்தியா & இலங்கை | கூட்டு கடற்பயிற்சி | திரிகோணமலை, இலங்கை | 2018, செப்டம்பர் 7 முதல் 13 வரை |
| ➢ **காசிந்த் 2018** (KAZIND 2018) | இந்தியா & கஜகஸ்தான் | கூட்டு இராணுவப் பயிற்சி | ஒட்டார் பகுதி, (Otar Region) கஜகஸ்தான் | 2018, செப்டம்பர் 10 முதல் 23 வரை |
| ➢ **நோமாடிக் எலிபெண்ட் 2018** (Nomadic Elephant 2018) | இந்தியா & மங்கோலியா | இரு தரப்பு வருடாந்திர கூட்டு இராணுவப் பயிற்சி | உலன்பாட்டார், (Ulaanbaatar) மங்கோலியா | 2018, செப்டம்பர் 10 முதல் 21 வரை |
| ➢ **மிலக்ஸ் 2018** (MILEX 2018) | தாய்லாந்து, நேபாளம் தவிர அனைத்து பிம்ஸ்டெக் (BIMSTEC) நாடுகளும் கலந்து கொண்டன | முதலாவது இராணுவப் பயிற்சி | புனே, மகாராஷ்டிரா | 2018, செப்டம்பர் 10 |
| ➢ **ஏவியா இந்திரா – 18** (AVAINDRA 18) | இந்தியா & ரஷ்யா | கூட்டு வான் பயிற்சி | லிப்பெட்ஸ்க் (Lipetsk) ரஷ்யா | 2018, செப்டம்பர் 02 முதல் 15 வரை |
| ➢ **ரேபிட் டிரைடென்ட்** (Rapid Trident) | உக்ரைன், அமெரிக்கா, நேட்டோ (NATO) உறுப்பு நாடுகள் | வருடாந்திர கூட்டு இராணுவப் பயிற்சி | ஸ்டாரிச்சி, (Starychi) உக்ரைன் | 2018, செப்டம்பர் 02 முதல் 15 வரை |
| ➢ **சாகர் மாதா தோழமைப் பயிற்சி 2018** (Sagarmatha Friendship - 2018) [Mt.Everest Friendship | நேபாளம் & சீனா | கூட்டு இராணுவப் பயிற்சி | சிச்சுவான் (Sichuan) சீனா | 2018, செப்டம்பர் 16 முதல் நடை பெற்றது. |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | | | |
|---|---|---|---|---|
| Exercise - 2018] | | | | |
| ➢ IOWave 18 [(Intergovernmental Oceanographic Commission (IOC) of UNESCO] | இந்தியா மற்றும் 23 நாடுகளுடன் இணைந்து இந்தப் பயிற்சியினை மேற்கொண்டது. | இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடைபெற்ற சுனாமிப் பேரிடர் தொடர்பான இப்பயிற்சியில் இந்தியப் பெருங்கடல் பகுதியிலுள்ள பல்வேறு நாடுகள் கலந்து கொண்டன. | | 2018, செப்டம்பர் 04 முதல் 05 வரை |

## *2018 செப்டம்பர் மாதம் விண்ணில் ஏவப்பட்ட ராக்கெட்டுகள்*

| செயற்கைக் கோள்/திட்டம் | நாடு | ஏவு வாகனம் (Launch Vehicle) | நோக்கம் (Purpose) | ஏவப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| ➢ **NovaSAR** மற்றும் **S1 - 4** | ஐக்கிய ராஜாங்கம் (UK) | PSLV - C42 (44வது PSLV இராக்கெட்) | வனப் பகுதிகளைப் படம்பிடித்தல், நிலப் பயன்பாடு மற்றும் பனிப் படர்வைக் கண்காணித்தல், வெள்ளம் போன்ற பேரிடர்களைக் கண்காணித்தல் மற்றும் கடல் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்துதல் | 2018, செப்டம்பர் 16 |

## *பாதுகாப்பு & விண்வெளி*

1) 2022ஆம் ஆண்டில் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கான இஸ்ரோவின் ககன்யான் திட்டத்தில் (GAGANYAAN MISSION) சேர்ந்து செயலாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் பிரான்சும் கூட்டாக இணைந்து கையெழுத்திட்டுள்ளன.

2) குறைந்த தாக்கு தூரம் கொண்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரை விட்டு தரைப் பாய வல்ல போர்த்தந்திர எறிகணையான (Surface to Surface Short-range tactical ballistic missile) **'பிரஹார்'** (Prahaar) ஒடிசா மாநில கடற்கரையிலிருந்து பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தினால் (DRDO) வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

3) **அஸ்த்ரா (ASTRA):** உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கண்ணுக்குப் புலனாகாத வகையில் செயல்படும் வான் விட்டு வான் சென்று தாக்கும் ஏவுகணையான (Beyond visual Range Air to Air Missile) அஸ்த்ரா (ASTRA)-வானது இந்திய வான்



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

படையினால் (Indian Air Force) S4-30 போர் விமானத்திலிருந்து ஏவப்பட்டு வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

4) டிராம்பேயிலுள்ள பாபா அணு ஆராய்ச்சி மையமானது (Bhabha Atomic Research Centre - BARC) இந்தியாவின் மிகவும் தொன்மையான அணு ஆராய்ச்சி உலையான அப்சராவினை (APSARA) மறு செயல்பாட்டுக்குக் (recommissioned) கொண்டு வந்துள்ளது. 1956-ல் தனது செயல்பாட்டினை முதன் முறையாகத் தொடங்கிய அப்சராவானது ஆசியாவின் முதலாவது அணு ஆராய்ச்சி உலையாகும்.

5) இந்தியக் கடலோரக் காவல்படையானது (Indian Coast Guard) உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ரோந்துக் கப்பலான **ICGS விஜயாவினை** (ICGS Vijaya) சென்னையிலிருந்து செயல்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது.

6) ஐக்கிய அரபு அமீரகாமானது (UAE) தனது செவ்வாய் கோளுக்கான **'ஹோப்' திட்டத்தினை (HOPE Mars Mission)** 2020ம் ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

7) ஜப்பானின் ஷிசுகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த (Shizuoka University) ஆராய்ச்சியாளர்கள் உலகிலேயே முதன் முறையாக விண்வெளியில் பயன்படுத்தும் 'சிறிய மாதிரி விண்வெளி உயர்த்தியினை' (Small prototype of Space elevator) வடிவமைக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்த விண்வெளி உயர்த்த மாதிரியானது H-2B விண்வெளி ஓடத்திலிருந்து இரண்டு சிறிய செயற்கைக் கோள்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட இருக்கிறது.

8) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (ISRO) **S-கற்றை ஒளியியல் மானியுடன் கூடிய டாப்ளர் வானிலை முன்னறிவிப்பு ராடாரை'** (S-Band Polarimetry Doppler Weather Radar) ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் தொடங்கி வைத்துள்ளது.

9) இந்திய வான் படையானது (IAF) முதல் முறையாக நடுவானிலேயே எரிபொருள் நிரப்புதலை (First ever mid-air refuelling) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தேஜஸ் MK-1 போர் விமானத்தில் (Tejas MK 1 with an IL-7) வெற்றிகரமாக நிகழ்த்தியது.

10) இந்திய வான்படையானது (IAF) அனந்தபூர் மாவட்டத்தில் **ஆளில்லா விமானம் தயாரிக்கும் மையத்தினை** (a drone manufacturing facility) நிறுவுவதற்கு **ஆந்திரப் பிரதேச** மாநில அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது.

11) ஜப்பானிய விண்வெளி முகமையான JAXA-வானது (Japanese Space Agency JAXA) ருயுகு விண்கல்லில் (Ryugu asteroid) இரண்டு எந்திர தரையியக்க ஊர்திகளை (Robotic Rovers) இறக்கி சாதனை புரிந்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

12) நாசாவின் பலூன் திட்டமானது (NASA's Balloon Mission) அண்மையில் உள்ளிருப்பு விளங்காமேகங்களைப் (noctilucent clouds/polar mesospheric clouds - PMCs) புகைப்படம் எடுத்தது. இந்தப் புகைப்படங்கள் வளிமண்டலம், பெருங்கடல்கள், ஏரிகள் போன்றவற்றில் ஏற்படும் காற்று சுழற்சியினைப் பற்றிய தெளிவான புரிதலை ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்படுத்த உதவும்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

| **புதிய கண்டுபிடிப்புகள்** | **வகை/நோக்கம்** (Type/Purpose) | **இடம்** |
|---|---|---|
| ➢ **ஸ்டேபிலோகாக்கல் எபிடெர்மிடிஸ்** (Staphylococcus Epidermidis) | மருந்துகளை எதிர்க்கும் தன்மை கொண்ட சூப்பர் பக் (Superbug resistant) | ஆஸ்திரேலியா |

1) **'Eye Rov TUNA'** என்பது இந்தியாவின் **முதலாவது நீருக்கடியில் செயல்படும் ஆளில்லா எந்திர விமானம்** (underwater robotic drone) ஆகும்.

2) மத்திய உள்துறை அமைச்சகமானது (Ministry of Home Affairs) குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்காக www.cybercrime.gov.in என்ற ஆன்லைன் இணையவாயிலைத் (Online Portal) தொடங்கியுள்ளது.

3) இந்தியாவின் மிகப்பெரிய துகள் முடுக்கியான (Cyclotron) **சைக்ளோன் - 30** (Cyclone - 30) ஆனது கொல்கத்தாவில் உள்ள **'மாறுபடும் ஆற்றல் துகள்முடுக்கி மையத்தில்'** (Variable Energy Cyclotron Centre - VECC) நிறுவப்பட்டுள்ளது. இந்த மையமானது அணு சக்தித் துறையின் (Department of Atomic Energy) கீழ் செயல்படுகிறது.

4) 500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **'முன் மாதிரி வேக ஈனுலையானது'** (Prototype Fast Breeder Reactor) கல்பாக்கத்தில் 2019-ம் ஆண்டிலிருந்து செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட உள்ளது.

5) காற்று மாசுபாட்டினைக் குறைப்பதற்காக காற்று மாசுபாட்டைக் சுத்திகரிக்கும் கருவியான **'வாயு'வானது (WAYU-Wind Augmentation Purifying Unit)** தலைநகர் **புதுதில்லியில்** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## புயல்கள் (Cyclones/Typhoons/Hurricanes)

| **புயல்கள்** | **பாதிக்கப்பட்ட நாடுகள்** | **நாள்** | **புயலுக்கு பெயர் வைத்த நாடு** |
|---|---|---|---|
| ➢ ஜெபி டைஃபூன் (JEBI Typhoon) | ஜப்பான் | 2018 செப்டம்பர் 4 | தென் கொரியா |
| ➢ மான்ங்குட் டைஃபூன் (Mangkhut Typhoon) | பிலிப்பைன்ஸ் (Philippines) | 2018 செப்டம்பர் 15 | தாய்லாந்து |

| | | | |
|---|---|---|---|
| ➢ ஃபுளாரன்ஸ் புயல் (Florence Hurricane) | அமெரிக்கா | 2018 செப்டம்பர் 14 | – |

## பொருளாதாரம்

1) மத்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையின் படி, 2017-18ம் ஆண்டில் இந்தியாவில் அதிகமான அந்நிய நேரடி முதலீடு (Foreign Direct Investment - FDI) செய்துள்ள நாடுகளின் பட்டியலில் **மொரீஷியஸ்** (Mauritius) முதலாவது இடத்திலும் **சிங்கப்பூர்** இரண்டாவது இடத்திலும் உள்ளன.

2) அரசு மின் சந்தைக்கான தேசிய திட்டமானது (National Mission on GeM) உட்சேர்ப்பை ஊக்குவிப்பது, பொதுக் கொள் முதலில் வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை ஊக்குவிப்பது, பணமற்ற, தொடர்பற்ற மற்றும் காகிதமற்ற பரிவர்த்தனையை அடைதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டதாகும்.

## விருதுகள்

| விருதுகள் / பரிசுகள் | விருது பெறும் நபர் / அமைப்பு (Person/Organisation) |
|---|---|
| ➢ **ஐக்கிய நாடுகளின் புவி சாம்பியன்ஷிப் விருது** 2018 (UN's Champions of earth Award 2018) | இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி<br>பிரான்சு அதிபர் - இம்மானுவேல் மாக்ரோன் (Emmanuel Macron) |
| ➢ **ஐக்கிய நாடுகளின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தொழில் முனைவோருக்கான விருது** (UN Environment award for Entrepreneurial Vision - 2018) | கொச்சி சர்வதேச விமான நிலையம் |
| ➢ **2016-2017ம் ஆண்டின் சிறந்த தேசிய சுற்றுலாத் தலங்களுக்கான விருது** (National Tourism Awards for 2016-17) | அகமதாபாத் & மண்டு (Mandu) |
| ➢ **டாக்டர் B.C. ராய் தேசிய விருது** (Dr.B.C.Roy National Award) | சிறந்த மருத்துவ ஆளுமைக்கான இவ்விருதானது (2018) டாக்டர்.B.K.மிஷ்ரா அவர்களுக்கு வழங்கபட்டது. |
| ➢ 39வது 'சரளா புரஸ்கார்' விருது 2018 (39th 'Sarala Puraskar' Award 2018) | சத்ருக்ன பாண்டவ் (Satrughna Pandav) |
| ➢ மெக்சிகன் ஆர்டர் ஆஃப் ஏஸ்டெக் ஈகிள் விருது (Mexican Order of the Aztec Eagle) | ரகுபதி சிங்கானியா (Raghupati Singhania) |

## நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்

1) **பல்வேறு நாடுகளின் புதிய அதிபர்கள்/பிரதமர்கள் :**

| நாடு | அதிபர்/பிரதமர் |
|---|---|
| ➢ **பாகிஸ்தான்** | • Dr.ஆரிஃப் உர் ரெஹ்மான் ஆல்வி Dr.Arif Ur Rehman Alvi) - பாகிஸ்தானின் 13-வது அதிபர்<br>• இம்ரான் கான் - 22வது பிரதமர் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ➢ **சூடான்** | மவுட்டஸ் மவுசா அப்தல்லா (Moutaz Mousa Abdallah) - பிரதமர் |
| ➢ **மாலத்தீவுகள்** | இப்ராஹிம் முகம்மது சோலிஹ் (Ibrahim Mohamed Solih) - அதிபர் |

2) பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்தின் முதலாவது பெண் தலைமை நீதிபதியாக **தஹிரா சஃப்தர்** (Justice Tahira Safdar) நியமிக்கப்பட்டுள்ளார்.

3) புதிய 'தலைமைப் பொருளாதார ஆலோசகரை' (Chief Economic Advisor) நியமிப்பதற்கான, பரிந்துரைகளை வழங்க முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநரான **பிமல் ஜலான்** (Bimal Jalan) தலைமையிலான ஒரு குழுவினை மத்திய அரசானது நியமித்துள்ளது.

4) நாட்டின் சிறைச்சாலைகளில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதற்காக உச்ச நீதிமன்றமானது **'நீதியரசர் அமிதவ ராய்'** தலைமையிலான குழுவினை (Justife Amitava Roy Committee) அமைத்துள்ளது.

5) இந்திய வங்கிகள் சங்கத்தின் (Indian Banks Association) தலைவராக பஞ்சாப் நேஷனல் வங்கியின் மேலாளர் மற்றும் முதன்மை நிர்வாகத் தலைவருமான 'சுனில் மேத்தா' (Sunil Mehta) நியமிக்கப்பட்டுள்ளார்.

6) மக்களவையின் அறவியல் குழுவின் (Ethics Committee) தலைவராக L.K.அத்வானி மறுநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

7) **நீதியரசர் ரஞ்சன் கோகாய்** (Justice Ranjan Gogoi) :

- இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 124-ன் கீழ் நீதியரசர் ரஞ்சன் கோகாய் அவர்களை உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக (Chief Justice of India) நியமித்துள்ளார்.
- இவர் இந்தியாவின் **46-வது** உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆவார்.
- இவர் அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர்
- இவர் தற்போதைய தலைமை நீதிபதியான தீபக் மிஸ்ராவின் பதவிக் காலம் முடிவடைந்த பிறகு 2018 அக்டோபர் 3 அன்று புதிய தலைமைநீதிபதியாகப் பொறுப்பேற்க உள்ளார்.

8) கமலேஷ் நீல்காந்த் வியாஸ் (Kamlesh Nilkanth Vyas) என்பவர் அணு ஆற்றல் கழகத்தின் தலைவராகவும் (Chairman of Atomic Energy Commission) அணு சக்தித் துறையின் செயலராகவும் (Secretary of Department of Atomic Energy - DAE) நியமிக்கப்பட்டுள்ளார்.

9) செயில் நிறுவனத்தின் (Steel Authority of India Ltd - SAIL) புதிய தலைவராக **அனில் குமார் சவுத்ரி** நியமிக்கப்பட்டுள்ளார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

10) எல்லைப் பாதுகாப்புப் படையின் (Border Security Force) புதிய இயக்குநர் ஜெனரலாக **ரஜ்னி காந்த் மிஸ்ரா** (Rajni Kant Misra) நியமிக்கப்பட்டுள்ளார்.

11) ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்றவரான **'மேரி கோம்'** (Mary Kom) பி.எஸ்.என்.எல் நிறுவனத்தின் (BSNL) புதிய விளம்பரத் தூதராக அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

12) லால் பகதூர் சாஸ்திரி நினைவு அறக்கடையின் (Lal Bahadur Sastri Memorial Foundation) முதலாவது மரியாதைக்குரிய நல்லெண்ணத் தூதுவராக (honoray Ambassador) திரைப்பட நடிகரான **அக்ஷய் குமார்** நியமிக்கப்பட்டுள்ளார்.

13) சத்தீஸ்கர் மாநிலத்தின் **வீணா சென்ட்ரே** (Veena Sendre) இந்தியாவின் முதலாவது 'மிஸ் டிரான்ஸ் குயின்' (Miss Trans Queen) பட்டத்தினை வென்றுள்ளார்.

14) ஈரான் நாட்டிலுள்ள ஆசியாவிலேயே மிகவும் உயரமான எரிமலையான டாமவன்ட் எரிமலையின் (Mount Damavand) உச்சியை இந்திய மலையேற்ற வீரர்களான 'சத்யரூப் சித்தாந்தா' (Satyarup Siddhanta) மற்றும் 'மவுசுமி கதுவா' (Mousumi Khatua) ஆகியோர் அடைந்து வரலாறு படைத்தனர்.

15) 'திறன்மிகு இந்தியா திட்டத்தினை' (Skill India Mission) பிரபலப்படுத்துவதற்காக பாலிவுட் நடிகர்களான வருண் தவான் மற்றும் அனுஷ்கா சர்மா ஆகியோர் அத்திட்டத்தின் நல்லெண்ணத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

16) பாதுகாப்புக்கான பாராளுமன்ற நிலைக் குழுவின் (Standing Committee of Defence) புதிய தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா (Kalraj Mishra) நியமிக்கப்பட்டுள்ளார்.

17) மத்தியக் கண்காணிப்பு ஆணையத்தின் (Central Vigilance Commission) புதிய செயலாக அனிந்தோ மஜும்தார் (Anindo Majumdar) நியமிக்கப்பட்டுள்ளார்.

18) நேபாளத்தின் சுற்றுலா மற்றும் கலாச்சாரத்தின் நல்லெண்ணத் தூதுவராக அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இந்திய திரைப்பட நடிகையான ஜெயப்பிரதா (Jaya Prada) நியமிக்கப்பட்டுள்ளார்.

## புத்தகங்கள் & ஆசிரியர்கள்

1) துணைக் குடியரசுத் தலைவரான **M. வெங்கய்யா நாயுடு** எழுதிய **"Moving on, Moving Forward : A year in office"** என்ற புத்தகத்தினை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ளார்.

2) **"The Twice Born - Life and Death of Ganges"** என்ற புத்தகத்தினை **ஆத்திஷ் தசீர்** (Aatish Taseer) எழுதியுள்ளார்.

3) **“The Rule Breakers”** என்ற புத்தகத்தினை **பிரீத்தி ஷெனாய்** எழுதியுள்ளார்.

4) **“Bastar Dispatches: A passage through the wilds”** என்ற புத்தகத்தினை **நரேந்திரா** எழுதியுள்ளார்.

5) **“Kashi : Secret of the Black Temple”** என்ற புத்தகத்தினை **வினீத் பாஜ்பா** (Vineet Bajpai) எழுதியுள்ளார்.

## ***விளையாட்டு***

1) 2017-18ம் ஆண்டுக்கானந துலீப் கோப்பையின் (Duleep Trophy 2017-18) இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ‘இந்தியா ரெட்’ (India Red) அணியை ஒரு இன்னிங்க்ஸ் மற்றும் 187 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ‘இந்தியா ப்ளூ’ (India Blue) அணியானது சாம்பியன் பட்டம் வென்றது.

2) வடகிழக்கு இந்தியாவில் வளர்ந்து வரும் திறமையுள்ள விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காக **அசாம் மாநிலத்தின் விளையாட்டு தூதுவராக** (Sports Ambassador of Assam) **ஹிமா தாஸ்** (Hima Das) நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஹிமா தாசின் சாதனைகள் :**

- **ஃபின்லாந்தின்** தாம்பேரில் (Tampere, Finland) 2018 ஜூலை 12 அன்று நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான **IAAF உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 51.46** விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து ஹிமா தாஸ் **தங்கப் பதக்கம்** வென்றார். சர்வதேச ஓட்டப் பந்தயப் போட்டிகளில் இந்தியர் ஒருவர் தங்கப் பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.
- மேலும், 2018 ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 51.00 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து புதிய தேசிய சாதனையை (national record) படைத்துள்ளார்.

3) **அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் : 2018 (ஆகஸ்டு 27 முதல் செப்டம்பர் 9 வரை), நியூயார்க், அமெரிக்கா (USA) :**

| | |
|---|---|
| ➢ ஆடவர் ஒற்றையர் | நோவக் ஜோகோவிக் - செர்பியா [வெற்றி]<br>எதிர்<br>ஜூவான் மார்ட்டின் டெல் பொட்ரோ (Juan Martin del Potro) - அர்ஜென்டினா |
| ➢ மகளிர் ஒற்றையர் (Women’s Singles) | நாவோமி ஒசாகா (Naomi Osaka) - ஜப்பான் [வெற்றி]<br>எதிர்<br>செரீனா வில்லியம்ஸ் (USA) |
| ➢ ஆடவர் இரட்டையர் (Men’s Doubles) | மைக் பிரயன் (Mike Bryan) & ஜாக் சோக் (Jack Sock) - அமெரிக்கா [வெற்றி]<br>எதிர்<br>லூகாஸ் குபோட் (Lukasz Kubot) - போலந்து &<br>மார்சிலோ மெலோ (Marcelo Melo) - பிரேசில் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ➢ மகளிர் இரட்டையர் (Women's Doubles) | ஆஷ்லே பார்டி (Ashleigh Barty) - ஆஸ்திரேலியா & - கோகோ வந்தெவெகே (Coco Vandeweghe) - அமெரிக்கா [வெற்றி] எதிர் டிமே பாபோஸ் (Timea Babos) - ஹங்கேரி & கிறிஸ்டினா மிலாடெனோவிக் (Kristina Mladenovic) - பிரான்சு |

4) **தேசிய விளையாட்டு விருதுகள் 2018 : 2018 செப்டம்பர் 25**

➢ **ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது** 2018 : இந்தியாவில் விளையாட்டுத் துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருதான இது ஏதேனும் ஒரு விளையாட்டுத் துறையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக சிறப்பான திறமையினை வெளிப்படுத்தும் வீரருக்கு வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| ➢ விராட் கோலி | கிரிக்கெட் |
| ➢ S.மீராபாய் சானு (S.Mirabai Chanu) | பளு தூக்குதல் (Weight lifting) |

➢ **துரோணாச்சார்யா விருதுகள்** 2018 : சர்வதேசப் போட்டிகளில் சிறப்பாக் செயல்படும் வீரர்களை உருவாக்கும் பயிற்சியாளர்களுக்கு (Coaches) இவ்விருதானது வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| ➢ சுபேதார் செனந்த அச்சய்யா குட்டப்பா (Subedar Chenanda Achian Kuttappa) | குத்துச்சண்டை |
| ➢ விஜய் சர்மா | பளு தூக்குதல் |
| ➢ A.சீனிவாச ராவ் | டேபிள் டென்னிஸ் |
| ➢ சுக்தேவ் சிங் பன்னு (Sukhdev singh Pannu) | தடகளம் (Athletics) |
| ➢ க்ளாரென்ஸ் லோபோ (Clarence Lobo) | ஹாக்கி |
| ➢ தரக் சின்ஹா (Tarak Sinha) | கிரிக்கெட் |
| ➢ ஜீவன் குமார் சர்மா (Jiwan Kumar Sharma) | ஜூடோ (Judo) |
| ➢ V.R.பீடு (V.R. Beedu) | தடகளம் (Athletics) |

➢ **அர்ஜுனா விருதுகள்** 2018 : இந்தியாவில் விளையாட்டுத் துறையில் வழங்கப்படும் இரண்டாவது மிக உயரிய விருதான இது ஏதேனும் ஒரு விளையாட்டுத் துறையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக சிறப்பான திறமையினை வெளிப்படுத்தும் வீரருக்கு வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| ➢ தடகளம் (Athletics) | நீரஜ் சோப்ரா |
| | ஜின்சன் ஜான்சன் |
| | ஹிமா தாஸ் |
| ➢ டேபிள் டென்னிஸ் | மணிகா பத்ரா (Manika Batra) |
| | G.சத்யன் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ➢ பேட்மின்டன் | நீலக்குர்த்தி சிக்கி ரெட்டி (Nelakurthi Sikki Reddy) |
| ➢ கிரிக்கெட் | ஸ்மிரிதி மந்தனா |
| ➢ கோல்ஃப் (Golf) | சுபாங்கர் சர்மா (Shubhankar Sharma) |
| ➢ ஹாக்கி | மன்பிரீத் சிங் (Manpreet Singh) |
| | சவீதா (Savita) |
| ➢ போலோ | ரவி ரத்தோர் |
| ➢ துப்பாக்கிச் சுடுதல் (Shooting) | ராகி சர்னோபாட் (Rahi Sarnobat) |
| | அங்கூர் மிட்டல் (Ankur Mittal) |
| | ஷ்ரேயாசி சிங் (Shreyasi Singh) |
| ➢ டென்னிஸ் | ரோஹன் போபன்னா |
| ➢ மல்யுத்தம் | சுமித் (Sumit) |
| ➢ வுஷு (Wushu) | பூஜா கடியன் (Pooja Kadian) |
| ➢ பாரா தடகளம் (Para Athletics) | அங்கூர் தாமா (Ankur Dhama) |
| ➢ பாரா பாட்மிண்டன் (Para Badminton) | மனோஜ் சர்க்கார் |

➢ **தயான் சந்த் விருது 2018 :** விளையாட்டுத் துறையின் வாழ்நாள் சாதனையாளருக்காக இவ்விருதானது வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| ➢ சத்யதேவ் பிரசாத் (Satyadev Prasad) | வில்வித்தை (Archery) |
| ➢ பரத் குமார் சேத்ரி (Bharat Kumar Chetri) | ஹாக்கி |
| ➢ பாபி அலாய்சியஸ் (Bobby Aloysius) | தடகளம் |
| ➢ சவுகாலே தாது தத்தாத்ரேயா (Chougale Dadu Dattatray) | மல்யுத்தம் |

5) 18 வயதே நிரம்பிய ஜப்பானிய நீச்சல் வீரரான **ரிக்காக்கோ இக்கி (Rikako Ikee)** ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2018-ன் மிகவும் மதிப்பு வாய்ந்த விளையாட்டு வீரராகக் (Most Valuable Player) கருதப்படுகிறார். மேலும் இப்பெருமையை அடையும் முதலாவது விளையாட்டு வீராங்கனை இவரே ஆவார்.

6) இந்தியா முதன் முறையாக FIBA 3 × 3 World Tour Masters 2018 போட்டியை ஐதராபாத்தில் நடத்துத் திட்டமிட்டுள்ளது.

7) சர்வதேச பெண்கள் கிரிக்கெட் போட்டிகளில் முதல் முறையாக 300 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீராங்கனை என்ற பெருமையை வேகப்பந்து வீச்சாளர் ஜூலன் கோஸ்வாமி (Jhulan Goswami) பெற்றுள்ளார்.

8) எட்டாவது ஆசிய யோகா சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் (8th Asian Yoga Sports Championship 2018) கேரளா மாநிலத்தில் நடைபெற உள்ளன. இப்போட்டிகள் திருவனந்தபுரத்திலுள்ள ஜிம்மி ஜார்க் உள்ளரங்க விளையாட்டு

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

மைதானத்தில் (Jimmy George indoor Stadium) 2018 செப்டம்பர் 27 முதல் 30 வரை நடைபெற உள்ளன.

## முக்கிய தினங்கள்

| தினம் (Days) | நிகழ்வு (Events) | கருத்துரு/முக்கியத்துவம் (Themes /Significance) |
|---|---|---|
| செப்டம்பர் 2 | உலக தேங்காய் தினம் (International Coconut Day) | "சிறப்பான உடல்நலம், வளம் மற்றும் ஆரோக்கியத்துக்கான தேங்காய்" (Coconut for Good Health, Wealth & Wellness) |
| செப்டம்பர் 5 | தேசிய ஆசிரியர் தினம் (National Teacher's Day) | முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் இந்த தினமானது கொண்டாடப்படுகிறது. |
| செப்டம்பர் 8 | சர்வதேச எழுத்தறிவு தினம் (International Literacy Day) | "எழுத்தறிவு மற்றும் திறன் வளர்ச்சி" (Literacy and Skills Development) |
| செப்டம்பர் 10 | உலக தற்கொலை தடுப்பு தினம் (World Suicide Prevention Day) | "தற்கொலைகளைத் தடுப்பதற்கு சேர்ந்து பணியாற்றுவோம்" (Working Together to prevent Suicide) |
| செப்டம்பர் 14 | தேசிய இந்தி தினம் (National Hindi Day) | இந்த தினமானது இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கு இந்தி மொழி, அதன் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் விழுமியங்களைப் பரவச் செய்கிறது. |
| செப்டம்பர் 15 | உலக ஜனநாயக தினம் (International Day of Democracy) | "அழுத்தத்தின் கீழ் ஜனநாயகம் : மாறிக் கொண்டிருக்கும் உலகிற்கான தீர்வுகள்" (Democracy under Strain : Solutions for changing world) |
| | தேசிய பொறியாளர்கள் தினம் (National Engineers Day) | இந்த தினமானது டாக்டர்.விஸ்வேஷ்வரய்யா அவர்களின் பிறந்த தினத்தை நினைவு கூறும் விதமாகக் கொண்டாடப்படுகிறது. |
| செப்டம்பர் 16 | உலக ஓசோன் தினம் (World Ozone Day) | "Keep cool and carry on : The Montreal Protocol" |
| செப்டம்பர் 21 | சர்வதேச அமைதி தினம் (International Day of Peace) | "அமைதிக்கான உரிமை - சர்வதேச மனித உரிமைகள் தீர்மானத்தின் 70வது வருடம்" (The Right to Peace - The Universal Declaration of Human rights at 70) |
| செப்டம்பர் 23 | உலக சைகை மொழிகளுக்கான தினம் (International Day of Sign Languages) | "சைகை மொழிகளுடன், ஒவ்வொருவரும் இணைக்கப்பட்டுள்ளனர்" (With sign Language, Everyone is Included) |
| செப்டம்பர் 26 | ஒட்டு மொத்த அணு ஆயுத ஒழிப்புக்கான சர்வதேச தினம் (International Day fo rthe Total Elimination of Nuclear Weapons) | அணு ஆயுதங்களின் மீதான அச்சத்தினைப் போக்கும் ஒரே வழி அவற்றை அடியோடு அழிப்பதேயாகும். |
| செப்டம்பர் 27 | உலக சுற்றுலா தினம் (World Tourism Day) | "சுற்றுலா மற்றும் டிஜிட்டல் மாற்றம்" (Tourism and the Digital Transformation) |
| செப்டம்பர் 28 | அனைவருக்கும் தகவல் கிடைப்பதை உறுதி செய்வதற்கான சர்வதேச தினம் (International Day for the Universal Access to Information) | யுனெஸ்கோ (UNESCO) அமைப்பானது இந்த தினத்தை 2016 முதல் கொண்டாடி வருகிறது. |
| | உலக ரேபீஸ் தினம் (World Rabies Day) | "தகவலைப் பகிர்க உயிரைக் காப்பாற்றுக" (Share the message. Save a life) |
| செப்டம்பர் 30 | உலக காது கேளாதோர் தினம் | இத்தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| | (World Deaf Day) | கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடப்படுகிறது. |
| | சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் (International Translation Day) | "மொழிபெயர்ப்பு : கலாச்சாரப் பாரம்பரியத்தை ஊக்குவித்தல்" (Translation : Promoting Cultural Heritage) |

- போஷான் மா (POSHAN MAAH) : மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகமானது (Ministry of Women and Child Development) 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தினை 'தேசிய ஊட்டச்சத்து மாதமாக' (National Nutrition Month) அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பானது நாட்டில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கு (malnutrition) எதிரான முயற்சிகளைக் குறிப்பாக அமைகிறது.

- செப்டம்பர் முதல் வாரம் - தேசிய ஊட்டச்சத்து வாரம்

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை உலகக் காது கேளாதோர் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS